திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)

Open Access & Peer Reviewed Journal

E-ISSN : 2583-0449

Nattrinai – Songs without the Name of the Poet and the Name of the Poets with Special Reference to Avvai Duraisamipillai Edition

R. Nepoliyan

Research Scholar, Department of Tamil, Central University of Tamil Nadu, Thiruvarur, India

Manuscript ID :
MT444A0155

Volume : **3**

Issue : **4**

Month : **December**

Year : **2023**

Received: 05.10.2023
Revised: 23.10.2023
Accepted: 04.11.2023
Published: 28.11.2023

Pages : 26-32

DOI:
10.5281/zenodo.10209912

ABSTRACT:

The name variation of poets is very important in textual criticism. This is a variation on the name of the poets and the naming of songs without the name of the poem. Such differences distinguish Avvai Duraisamipillai's edition and research from Pinnathur Narayanasamy Iyer. This article examines the variation of poets' names and the naming of songs that do not have poetic names from the perspective of Avvai Duraisamipillai.

KEYWORDS:

Nattrinai, Sangam Literature, Commentaries, Textual Variation, Name Variation of Poets, Editions

நற்றிணை - புலவர் பெயர் இல்லாப் பாடல்களும் புலவர் பெயர்களும் (ஔவை துரைசாமிப்பிள்ளையின் பதிப்பை முன்வைத்து)

இர. நெப்போலியன்
முனைவர்பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பாடவேறுபாட்டாய்வில் புலவர் பெயர் வேறுபாடு குறித்த பார்வை முக்கியத்துவம் உடையதாகிறது. இது, புலவர் பெயர் வேறுபாடு, புலவர் பெயர் தெரியாத பாடல்களுக்குப் புலவர் பெயர் தருதல் என்ற நிலையில் அமைகிறது. பின்னத்தூர் நாராயணசாமி ஐயரின் பதிப்பிலிருந்து ஔவை. துரைசாமிப்பிள்ளையின் பதிப்பும் ஆய்வும் இந்தவகையில் வேறுபடுகிறது. புலவர் பெயர் வேறுபாடுகளையும் பெயர் தெரியாத பாடல்களுக்குப் புலவர் பெயரைக் கொடுப்பதிலும் ஔவை. துரைசாமிப்பிள்ளையின் ஆய்வுமுறையை இக்கட்டுரை விளக்குகிறது.

கருச்சொற்கள்

பாடவேறுபாடு, நற்றிணை, புலவர் பெயர் வேறுபாடு, சங்க இலக்கியம், உரைகள், பதிப்புகள்

முன்னுரை

சங்க இலக்கியங்களில் பாடவேறுபாடுகளும் புலவர்பெயர் வேறுபாடுகளும் மிகுதியாக உள்ள நிலையில், இவை குறித்த ஆய்வுகள் முக்கியத்துவமுடையனவாகின்றன. சுவடிகளில் இருந்து அச்சாக்கம் பெறுகின்றபோது இவ்வாறான சிக்கல்கள் வருகின்றன. அந்நிலையில் இருபதாம் நூற்றாண்டில் இவை குறித்த ஆய்வுகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த வகையில் புலவர் பெயர் வேறுபாடுகள் குறித்த ஆய்வுகள் அமைகின்றன. சங்கத் தொகையாக்க நூல்கள் பலவற்றிலும் புலவர் பெயர் தெரியாத பாடல்கள் நிறைய உள்ளன. இவ்வாறான பின்னணியில் நற்றிணைப் பாடல்களில் புலவர் பெயர் தெரியாத பாடல்களுக்கு ஔவை. துரைசாமிப்பிள்ளையின் பெயர்கொடுக்கும் முறையியலை விளக்குவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நற்றிணைக்கு பழைய உரைகள் இல்லை. முதலில் உரை எழுதிய பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் (1915) 55 பாடல்களுக்குப் புலவர் பெயர் தெரியவில்லை எனக் குறிப்பிடுகிறார். அதைப்போலவே 234ம் பாடலும் அவருடைய உரைப்பதிப்பில்

இடம்பெறவில்லை. அதற்குப்பின் நற்றிணைக்கு 1966-ல் உரை எழுதிய ஔவை சு.துரைசமிப்பிள்ளை எல்லாப் பாடல்களுக்கும் புலவர் பெயர் குறிப்பிடுகிறார். அதற்குக் காரணமாகத் தனக்குக் கிடைத்த சுவடிகளை ஒப்புநோக்கிக் காட்டுகிறார். பெயர் இல்லாப் பாடலுக்கும் புலவர் பெயர் தந்துள்ளார். அப்புலவர் எப்பகுதியைச் சேர்ந்தவர் என்ற கேள்விக்கு கல்வெட்டு சான்றாதாரங்களையும் தந்து விளக்குகிறார்.

ஔவை துரைசாமிப்பிள்ளையின் உரைப் பகுப்பு முறை

ஔவை துரைசாமிப்பிள்ளையின் உரைப் பகுப்பு முறையானது அகத்திணைக் கோட்பாடு சுட்டும் முதற்பாட்டின் முதற்பகுதி, பாடலாசிரியன் பெயர் விளக்கப்பகுதி, பாடலின் கூற்று விளக்கப் பகுதி, வினைமுடிபு சுட்டல், பாடவேறுபாடு தருதல், தொல்காப்பிய மேற்கோளாட்சிக் குறிப்பு, உரை விளக்கப்பகுதி, புலவர் பெயர் இல்லாப் பாடல்களும் புலவர் பெயர்களும், அருஞ்சொற்பொருளும் பொருள் விளக்கமும், விளக்கச் சொற்பொருள், பொருள் விளக்கமும் எடுத்துக்காட்டும், பெயர்க் காரணம் தருதல், இக்கால வழக்கைத் தருதல், சமுதாய வழக்காறு சுட்டல், இலக்கணக் குறிப்புத் தருதல், சொல் மூலம் காட்டுதல் - வடமரபை எதிர்த்தல், ஒத்த சொற்களுக்கிடையிலான வேறுபாடு சுட்டல், ஒத்தத் தொடர்களை எடுத்துக்காட்டல், உள்ளுறை இறைச்சி விளக்கங்கள், வரலாற்றுச் செய்திகள் அடிப்படையில் விளக்கல் என்ற பகுப்பு முறைகளில் அமைகிறது.

ஔவை துரைசாமிப்பிள்ளை பிற பேராசிரியர்களின் உதவியால் கிடைத்த பிற ஏடுகளை ஒப்பு நோக்கி பல பாடவேறுபாடுகளும் பெயரில்லாப் பாடல்களுக்குப் புலவர் பெயரும் சில புலவர்களுக்குப் பெயர்களை மாற்றியும் தந்துள்ளார். இதற்குச் சான்றாக தனது நற்றிணை முன்னுரையில்,

1. அரசினர் கையெழுத்து நூல் நிலைய ஏடு
2. மதுரை தமிழ்ச்சங்கத்து ஏடு
3. டொம்மிச்சேரி கருப்பையாத்தேவர் ஏடு
4. புதுப்பட்டி சிவ முத்தையா செட்டியார் ஏடு

இவ்வேடுகளை உடன் வைத்து ஆராய்ந்ததில் சுமார் 1500க்கும் மேற்பட்ட பாடவேறுபாடுகளும், பெயர் தெரியாதிருந்த பல பாட்டுக்களின் ஆசிரியர் பெயர்களும் தெரிய வந்தன என்று கூறுகிறார். (நற்றிணை. 1996.ப.ix) “சில ஆசிரியர்களின் பெயர்கள் திருத்தமடைந்தன. இதன் உண்மைத்தன்மையை அறிய பெயர்களிலும் பாட்டுக்களிலும் காணப்படும் ஊர்களை அறிதற்கும் அரசியலார் வெளியிட்டிருக்கும் கல்வெட்டுத் தொகுதிகளும் ஆண்டறிக்கைகளும் போதிய துணைபுரிந்தன” (நற்றிணை. 1996.ப.x) என்று அம்முன்னுரையில் குறிப்பிடுகின்றார். இந்தச் சான்றுகளின் அடிப்படையில்

பின்னத்தூர் நாராயணசாமி ஐயரிடமிருந்து அவர் குறிப்பிடும் புலவர் பெயர்வேறுபாடுகளைப் பின்வருமாறு காணலாம்.

திருத்தமடைந்த ஆசிரியர் பெயர்கள் பின்வருமாறு,

பாடல் எண்	பின்னத்தூர் நாராயணசாமி	ஔவை துரைசாமிப்பிள்ளை
24	கணக்காயனார்	குன்றூர் கிழார் மகனார் கண்ணத்தனார்
56	பெருவழுதி	இளங்கீரனார் - 56
64	உலோச்சனார்	உரோடகத்தனார்
66	இனிசந்த நாகனார்	மிளைக்கந்தன் நாகனார்
135	கதப்பிள்ளையார்	தூங்கல் ஓரியார்
141	சல்லியங்குமரனார்	அரிசிலங்குமரனார்
209	நொச்சி நியமங்கிழார்	கச்சிப் பேட்டு நன்னாகையார்
221	இளவேட்டனார்	இடைக்காடனார்

நற்றிணை 66ம் பாடலின் ஆசிரியர் மிளைக்கந்தன் நாகனார் என ஔவை துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுகிறார். நாராயணசாமி ஐயர், இனிசந்த நாகனார் எனக் குறிப்பிடுகின்றார். மிளைக்கந்தன் நாகனார் என்று அவர் கூறுவதற்கு, "இவர் பெயருள் மிளை என்பது ஓர் ஊர்; கந்தன் என்பது நாகன் என்ற இச்சான்றோருடைய தந்தை பெயர். மிளைக் கந்தனார் என்றொரு சான்றோர் குறுந்தொகைப் புலவர் பெருமக்களில் காணப்படுகின்றார். இங்கே நாகனாருடைய தந்தை கந்தனார் எனப்பட்டமையின், இவர் குறுந்தொகைக் கந்தனாரின் வேறோ என நினைத்தற்கு இடந்தருகிறது. தெளிதற்கேற்ற குறிப்புக்கள் கிடைத்தில. மிளை என்பது சோழநாட்டு ஊர்களில் ஒன்று என்பதை முன்பே கூறினாம். இச்சான்றோர் பெயர் ஏடுகளில் இளைக்கந்தன் நாகனார் என்றும், அச்சுப்பிரதியில் இனிச் சந்தனாகனார் என்றும் காணப்படுகிறது. புதுப்பட்டியேடு ஒன்று தான் மிளைக்கந்தன் நாகனார் என்று குறிக்கிறது" (ஔவை துரைசாமிப் பிள்ளை. 1966:261) என்று விளக்கம் கூறி நிறுவுகிறார்.

நற்றிணை 141 ஆம் பாடலின் ஆசிரியர் சல்லியங்குமரனார் என பின்னத்தூரார் குறிப்பிடுகிறார். ஆனால் ஔவை. துரைசாமிப் பிள்ளையோ அரிசிலங்குமரனார் என்கிறார். இதற்கான காரணமாக, "அரிசில் என்பது காவிரியின் கிளையான அரிசிலாறு காவிரியினின்றும் பிரியுமிடத்தே குடந்தைக்கு அருகேயிருந்த மறைந்து போன ஊர். அரிசில் கிழார் என்னும் சான்றோரும் இவ்வூரவரே. இக்குமரனாரைச் சில்லியங் குமரனார் என திரு. வையாபுரிப்பிள்ளையின் கையெழுத்துப் படி கூற, அச்சுப்படி சல்லியங் குமரனார் எனத் திருத்திக் காட்டப் புதுபட்டியேடு இவர் பெயரை அரிசிலங் குமரனாரெனக் குறித்தமை கொண்டு மேலே குறித்த உண்மை வடிவு உய்த்துணரப்பட்டது. இக்குமரனார், சோழ நாட்டுக் கிள்ளியையும் அரிசிலாற்றையும்

இப்பாட்டின்கண் எடுத்துப் பாடுவது இவர் அரிசிற்குமரனார் எனப்படுவதை வற்புறுத்துகிறது. இவர் பாடியதாக இவ்வொரு பாட்டொழிய வேறு காணப்படவில்லை” (மேலது, 1966:545) என்று விளக்குகிறார். இவ்வாறு நற்றிணையில் தனக்கு கிடைத்த சுவடிகளின் சான்றுகளின் அடிப்படையில் ஆராய்ந்து ஆறு பாடல்களின் புலவர் பெயர்களை மாற்றித்தந்துள்ளார். இவை பின்னத்தூராரிடமிருந்து வேறுபடும் இடங்களாக இவற்றைச் சுட்டலாம்.

புலவர் பெயர் இல்லாப் பாடல்களும் புலவர் பெயர்களும்

நற்றிணையில் 55 பாடல்களுக்குப் புலவர் பெயர் தெரியவில்லை என பின்னத்தூரார் குறிப்பிடவில்லை. ஆனால் ஔவை.துரைசாமிப்பிள்ளை தனக்குக் கிடைத்த சுவடிகள் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு, 55 பாடல்களுக்கும் பெயர்களைக் குறிப்பிடுகிறார். அவை, கண்ணகனார் (8,188), குடவாயிற் கீரத்தனார் (10), நல்வேட்டனார் (22), உலோச்சனார் (45,167), கோட்டம்பலவனார் (46), பாலை பாடிய பெருங்கடுங்கோ (84,174), பெருந்தேவனார் (92), பெருவழுதியார் (107), இளவேட்டனார் (108), உலோச்சனார் (111), அம்மள்ளனார் (115), கச்சிப்பேடு கதக்கண்ணனர் (125), ஓதலாந்தையார் (126), பெருங்கண்ணனார் (132), கருவூர்க் கதப்பிள்ளையார் (134), வெள்ளூர் கிழார் மகனார் வெண்பூதியார் (160), பெருநந்தலைச் சாத்தனார் (161,177), நெய்தல் தத்தனார் (162,184), தாயங்கண்ணனார் (163), பேயனார் (164), நல்வெள்ளியார் (165), மருதன் இளநாகனார் (166), மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் (168), இடைக்காடனார் (169,189), பரணர் (170,185,192), செங்கண்ணனார் (171), நக்கீரனார் (172), பிரமன்காரி (173), மதுரைக் கணக்காயனார் (175), மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தனார் (176), பூதன் தேவனார் (178), உமட்டூர் கிழார் மகனார் பரங்கொற்றனார் (179), கயமனார் (180,183,271), உம்பற்காட்டு இளங்கண்ணனார் (181), அதியன் விண்ணத்தனார் (182), அறுவை வாணிகன் இளவேட்டனார் (186), நக்கண்ணையார் (190), நற்றாமனார் (193), பெருங்குன்றூர் கிழார் (195), ஆவூர் கிழார் மகனார் கண்ணனார் (207), இளங்கண்ணனார் (229), வெள்ளிவீதியார் (235), மோசிக்கீரனார் (355), அஞ்சிலாந்தையார் (385), முத்தூற்று மூதெயினனார் (396) என்று குறிப்பிடுகிறார். சான்றாகச் சில பாடல்களைக் குறிப்பிடலாம்.

நற்றிணை 8ஆம் பாடலுக்குப் பின்னத்தூரார் பதிப்பில் புலவர் பெயர் குறிப்பிடவில்லை. ஔவை துரைசாமிப்பிள்ளை இப்பாடலுக்கு கண்ணகனார் என்று புலவர் பெயரைக் குறிப்பிடுகிறார். அப்பெயர் எந்த ஏட்டில் இருந்து கிடைத்தது என்ற குறிப்பையும் தருகிறார். “இச்சான்றோர் பெயர் அச்சுப்படிகளில் காணப்படவில்லை, ஆயினும் புதுபட்டி ஏட்டிலும் தேவர் ஏட்டிலும் கண்ணகனார் என்ற குறிப்பு துறைகூற்றின் இறுதியில் காணப்படுகிறது. அது காண இச்சான்றோர் பெயர்

கண்ணகனார் என இருக்கலாம் என்று கருதி இங்கே கொள்ளப்பட்டது. கண்ணகனார் என்ற சான்றோருடைய பாட்டு ஒன்று இந்நூற்கண் உளது, அதனால் இதுவும் அவர் பாட்டாகலாம் என்றாற்குத் துணிவு". (மேலது, 1966:38) இவ்வாறு காரணத்தை விளக்குகிறார்.

நற்றிணை 10 வது பாடலுக்கு பின்னத்தூரார் பதிப்பில், புலவர் பெயர் குறிப்பிடவில்லை. ஔவை துரைசாமிப்பிள்ளை இப்பாடல் ஆசிரியர் குடவாயிற் கீரத்தனார் என்று குறிப்பிடுகிறார். "இவர் பெயர் அச்சுப்படிகளிலும் மதுரைத் தமிழ்ச் சங்க ஏட்டிலும் இன்றி ஏனை ஏடுகளில் காணப்படுகின்றது. குடவாயில் என்பது சோழநாட்டுப் பழமையான ஊர்களில் ஒன்று; இக்காலத்தில் இது குடவாசல் என வழங்குகிறது. இவ்வூரினராதல் பற்றிச் சான்றோர் இவரைக் குடவாயிற் கீரத்தனார் என்று நூல்களில் குறித்துள்ளார். மேலும் இவருக்குத் தமது ஊரின்பால் பேரன்பு உண்டு. இவர் பாடிய பாட்டுக்கள் தொகை நூல்களில் பல உள்ளன". (ஔவை துரைசாமிப் பிள்ளை, 1966:48)

நற்றிணை 162ம் பாடலுக்குப் பின்னத்தூரார் பதிப்பில் புலவர் பெயர் கொடுக்கவில்லை. ஔவை துரைசாமிப்பிள்ளை இப்படலுக்கு ஆசிரியர் பெயர் கொடுத்துள்ளார், அதோடு மட்டுமல்லாமல் ஏனைய புலவர் பெயர் இல்லாப் பாடல்களுக்குப் பெயர்கொடுத்தமைக்கு சில இடங்களில் எந்தப் பிரதியில் இப்பெயர் இடம் பெறுகிறது என்று குறிக்கவில்லை. இவ்வாசிரியர் பற்றி கூறுகையில் அதற்கு விளக்கம் கொடுக்கிறார். "இவர் பெயர் அச்சுப்பிரதியில் காணப்படவில்லை யாயினும் இந்நூலாராய்ச்சிக்குக் கிடைத்த இரண்டு பழைய ஏடுகளிலும் காணப்படுகிறது. இவ்வாறே அச்சுப்பிரதியில் காணப்படாது இந்நூற்கண் காணப்படும் ஆசிரியர் பெயர்கள் ஏடுகளில் காணப்பட்டவை எனக் கொள்க" (மேலது, 1966:642). இதன் அடிப்படையில் மற்ற பாடல்களையும் ஆராய வேண்டும்.

பாடவேறுபாடு கொண்ட புலவர் பெயர்கள்

இவர் தனக்குக் கிடைத்த சுவடிகளை ஒப்பு நோக்கி, பெயரில்லாப் பாடல்களுக்கு புலவர் பெயர் தந்தும் சில பாடல்களுக்கு மாற்றியும் கொடுத்துள்ளார். சில புலவர் பெயர்கள் சிறிய பாடவேறுபாட்டுடன் காணப்படுகின்றன. அவை,

பாடல் எண்	பின்னத்தூர் நாராயணசாமி ஐயர்	ஔவை துரைசாமிப்பிள்ளை
15	அறிவுடைநம்பி	பாண்டியன் அறிவுடை நம்பி
25	பேரிச்சாத்தனார்	வடவண்ணக்கன் பேரிசாத்தனார்
28	முதுகூற்றனார்	முதுகூத்தனார்
34	பிரமசாரி	பிரமன்காரி
36	சீத்தலைச் சாத்தனார்	மதுரை சீத்தலைச் சாத்தனார்
40	கோண்மா நெடுங்கோட்டனார்	கோமல் நெடுங்கோடனார்
42	கீரத்தனார்	குடவாயிற் கீரத்தனார்
44	பெருங்கௌசிகனார்	பெருங்கோசிகனார்

இவ்வாறு பல்வேறு பாடல்களுக்குப் பெயர்களை மாற்றியுள்ளார். அத்துடன் அதற்கான காரணங்களையும் குறிப்பிடுகிறார். சான்றாக, நற்றிணை 28 ஆம் பாடலாசிரியரை முதுகூற்றனார் என பின்னத்தூரார் குறிப்பிடுகிறார். ஆனால், முதுகூத்தனார் என ஔவை குறிப்பிடுகிறார். அதற்கு, "இச்சான்றோர் பெயர் முதுகூற்றானார் எனவும் காணப்படுகிறது. உரையூர் முதுகூத்தனார் எனவும் இவர் குறிப்பிடுவதால், இவர் சோழநாட்டு நல்லிசைச் சான்றோர்களில் ஒருவர் என்பது தெளிவாம்" (மேலது, 1966:126). என்று குறிப்பிடுகிறார்.

நற்றிணை 44ஆம் பாடலாசிரியரை பெருங்கோசிகனார் எனக் குறிப்பிடுகிறார். அதனை, "வடநூல் ஒழுக்கங்களும் கொள்கைகளும் தமிழகத்திற் பரவிய போது, வடநூற் சான்றோர் பெயரைத் தம் மக்களுக்கு இட்டு வழங்குவது மரபாயிற்று. இந்நாளிலும் மேலை நாட்டார் ஒழுக்கங்களையும் கருத்துக்களையும் மேற்கொண்ட சிலர், மேலைநாட்டுச் சான்றோர் பெயர்களை மக்கட்கு இட்டிருப்பதைக் காண்கிறோமன்றோ? தமிழர் பண்டு தொட்டே புதுமை மேவலராயிருந்தமைக்கு இது தக்க சான்றாகும். வடநூல் கூறும் சான்றோர்களில் கௌசிகனார் என ஒருவர் உளர்; அவருடைய குணநலங்களை வியந்த இச்சான்றோருடைய பெற்றோர் இவர்க்குக் கோசிகன் என்ற பெயரை இட்டுள்ளனர். இளங்கோசிகன் என ஒருவர் இருந்தமையின் இவர் பெருங்கோசிகன் எனப்பட்டார்" (மேலது, 1966:185) என்று விளக்குகிறார்.

நற்றிணை 110 ஆம் பாடலாசிரியர் பூதனார் என்கிறார் ஔவை. அதற்கு, "இவர் பெயர், அச்சுப்படியிலும் மதுரைத்தமிழ்ச்சங்க ஏட்டிலும் போதனார், பொத்தனார் எனக் காணப்படினும் ஏனை ஏடுகளில் பூதனார் என்றே காணப்படுகிறது. பூதனார் என்பது பயின்ற வழக்கிற்றாகலின், அதுவே ஈண்டுக் கொள்ளப்பட்டது. இப்பூதன் என்ற பெயர் மக்களிடையே கி.பி. பதினான்கு பதினைந்தாம் நூற்றாண்டுவரை வழங்கி வந்தமை கல்வெட்டுக்களால் அறிகின்றோம். பூதனார் என்பதே இப்பாட்டைப் பாடிய சான்றோர் பெயராயின், நற்றிணை 29-ஆம் பாட்டைப் பாடியோரும் இவரும் ஒருவர் என்பது

பெறப்படும்” (மேலது, 1966:423) என விளக்கம் கூறுகிறார். இந்தப் பாடவேறுபாட்டால் நிகழ்ந்த புலவர் பெயர் வேறுபாடு ஏடெழுதுவோரால் நிகழ்ந்திருக்க கூடும் என்று பின்னத்தூர் நாராயணசாமி ஐயரும் குறிப்பிடுகிறார்.

முடிவுரை

நற்றிணைக்கு 55 பாடல்களுக்குப் புலவர்பெயர்கள் தெரியவில்லை. ஔவைதுரைசாமிப்பிள்ளை அவைகளுக்கான புலவர் பெயர்களைச் சான்றுகளின் அடிப்படையில் குறிப்பிடுகிறார். எனவே ஔவை.துரைசாமிப்பிள்ளையின் சான்றுகளின் அடிப்படையிலான ஆய்வுமுறை நற்றிணைப் புலவர் பெயர் வேறுபாட்டு ஆய்வுக்கு மிகவும் முக்கியமானதாக அமைகிறது. இந்தவகையில் பிற இலக்கியங்களையும் நோக்கலாம்.

துணைநூற்பட்டியல்

1. ஔவை, சு, துரைசாமிப்பிள்ளை. *நற்றிணை.* சென்னை, அருணா பதிப்பகம், 1966.
2. ஔவை, சு, துரைசாமிப்பிள்ளை. *நற்றிணை,* அருணா பதிப்பகம், சென்னை, 1968.
3. பின்னத்தூர் நாராயணசாமி ஐயர். *நற்றிணை.* சென்னப்பட்டனம், சைவவித்தியா நுபாலனயந்திரசாலை, 1915.
4. பெ, மாதையன். *உரையியல்.* சென்னை, பாவை பதிப்பகம், 2014.

REFERENCES

1. Avvai, S, Duraisamipillai. *Nattrinai.* Chennai, Aruna publications, 1996.
2. Avvai, S, Duraisamipillai. *Nattrinai.* Chennai, Aruna publications, 1968.
3. Pinnathur Narayanasamy Iyar. *Nattrinai.* Channapatnam, Saivavidya Nupalanayandrasalai, 1915.
4. P, Mathaiyan. *Uraiyiyal.* Chennai, Pavai Publications, 2014.